திருநெல்வேலி மாநகராட்சி

**2020ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**

1) திருநெல்வேலி மாநகராட்சியில் குடிநீர் மேம்பாட்டு திட்டப் பணிகள், பாதாள சாக்கடை திட்டப் பணிகள் ஆகியவற்றை நிறைவேற்றியதில் அதிகமான சாலை உடைப்புகள் ஏற்பட்டமையாலும் மற்றும் மழையினால் சாலைகள் மிகவும் சேதமடைந்தமையாலும் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி, 30 எண்ணம் பழுதடைந்த தார்ச்சாலைகளை 21.398 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு செய்யும் பணிகளை உலக வங்கியின் TNSUDP நிதியுதவியில் கீழ்க்கண்ட நிதி ஆதாரத்தில் மேற்கொள்ள நிர்வாக இயக்குநர், TNUIFSL, சென்னை அவர்களின் கடிதம் எண் TNUDF/Projects/TNSUDP/Tirunelveli Roads, நாள் 07.10.2020-ன் வாயிலாக மாமன்ற ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. அதன் விபரம் கீழ்வருமாறு.:

| Sl. No. | Means of Finance | Amount (Rs. in Crores) |
|---|---|---|
| 1 | Loan from TamilNadu Urban Development Fund(TNUDF) under World Bank assisted TNSUDP | 3.70 |
| 2 | Grant from Project Sustainability Grant Fund (PSGF) under World Bank assisted TNSUDP | 8.52 |
| 3 | ULB Contribution | 2.78 |
| | **Total** | **15.00** |

மேற்கண்ட நிதி ஆதாரங்களின்படி, திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 30 எண்ணம் பழுதடைந்த தார்ச்சாலைகளை 21.398 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு செய்யும் பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு:–

பொருளில் கண்ட விபரப்படி, மேற்கண்ட நிதி ஆதாரங்களின் படி, இம்மாநகராட்சியில் 30 எண்ணம் பழுதடைந்த தார்ச்சாலைகளை 21.398 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் சீரமைப்பு செய்யும் பணிகளை மேற்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 147:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் இ1/2716/2020)

---

2) திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், இராமையன்பட்டி உரக்கிடங்கில் குப்பைகளை எரிப்பதற்கு ஏதுவாக 10 TPD திறன் கொண்ட எரிப்பு ஆலையை (Incineration Plant) நிறுவி அதன் தொடர்புடைய பணிகள் செய்யும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.29426-2/P3/2019 நாள் 06.12.2019-ல் ரூ.1.00 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், முதன்மை தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.32456/2019/DO1 நாள் 06.02.2020-ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின்படியும், மேற்படி பணிக்கு மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 19/2020-21-ன் படி மாநில அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் நமது அம்மா தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 10.09.2020-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டதின்படி 29.09.2020-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மின்னணு முறையில்

ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் (1) M/s.Neptune Automation, ஈரோடு மற்றும் (2) M/s.SS Green Energy, சேலம் ஆகிய இரண்டு நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 30.09.2020-ல் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் M/s.SS Green Energy, சேலம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் ஒப்ப்நதப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை நாள் 06.10.2020 ன்படி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான M/s.Neptune Automation, ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் மேற்படி நிறுவனத்தின் விலை அட்டவணை மட்டும் 08.10.2020 ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.Neptune Automation, ஈரோடு நிறுவனத்தின் ஒப்ப்நதப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|
| 1 | இராமையன்பட்டி உரக்கிடங்கில் குப்பைகளை எரிப்பதற்கு ஏதுவாக 10 TPD திறன் கொண்ட எரிப்பு ஆலையை (Incineration Plant) நிறுவி அதன் தொடர்புடைய பணிகள் செய்தல் | ரூ.1,00,00,000/- | ரூ.99,00,000/- |
| | | | மதிப்பீட்டை விட 1.00% குறைவு |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு M/s.Neptune Automation, ஈரோடு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.99,00,000/- ஆனது மதிப்பீட்டை விட 1.00% குறைவாக உள்ளதால் 08.10.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Neptune Automation, Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.99,00,000/- மதிப்பீட்டை விட 1.00% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) இராமையன்பட்டி உரக்கிடங்கில் குப்பைகளை எரிப்பதற்கு 10 TPD திறன் கொண்ட எரிப்பு ஆலையினை நிறுவும் பணியானது மிகவும் அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும் பொது சுகாதார நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், 08.10.2020-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Neptune Automation , Erode நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.99,00,000/- மதிப்பீட்டை விட 1.00% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 148:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண் 19/2020-21)

---

3) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சந்தையினை மேம்படுத்தும் பணியினை ரூ.10.97 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 01.08.2018 அன்று நடைபெற்ற 5வது சீர்மிகு நகர இயக்குநர்கள் கூட்டத்தில் வரிசை எண்.5-ல் தீர்மானிக்கப்பட்டதின் அடிப்படையிலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.14595/2018/IHSDP-3-2 நாள் 09.08.2018-ல் ரூ.10.97 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும்,

தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.16856/2018/DO1 நாள் 21.08.2018-ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின்படியும் மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 4/2018-19/SCM-ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினமணி தமிழ் நாளிதழிலும் 06.09.2018 அன்றும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 13.09.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 10.10.2018ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பின்னர் நிர்வாக காரணங்களால் ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் 24.10.2018 வரை நீட்டிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் (1) மெசர்ஸ் PSK Engineering Constructions, Namakkal மற்றும் (2) திருமதி.பி.லெட்சுமி, நாமக்கல் ஆகிய இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மெசர்ஸ் PSK Engineering Constructions, Namakkal நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மாமன்றத் தீர்மானம் எண்.120 நாள் 16.11.2018ன்படி ஒப்புக்கொள்ளப்பட்டு மேற்படி நிறுவனத்திற்கு 20.11.2018ல் வேலை ஆணை வழங்கப்பட்டுள்ளது. பின்னர் நிர்வாக காரணங்களால் 20.01.2020 அன்று மெசர்ஸ் PSK Engineering Constructions, Namakkal ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டு 03.03.2020, 13.04.2020 மற்றும் 13.07.2020 ஆகிய நாட்களில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட நிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. அதன்பின்னர் ஐந்தாவது அழைப்பாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 2/2020-21/SCM-ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினத்தந்தி தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 23.07.2020-ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டதின்படி. மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 26.08.2020-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் (1) M/s.Sri Naachimaar Engineering Constructions, Namakkal மற்றும் (2) M/s.Sri Ramana Building Construction Pvt Ltd, Ramanathapuram ஆகிய இரண்டு ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் 27.08.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே தொழில்நுட்பதகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் அன்னார்களது விலைப்புள்ளி அட்டவணைகள் 31.08.2020ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.Sri Naachimaar Engineering Constructions, Namakkal நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | M/s.Sri Ramana Building Construction Pvt Ltd, Ramanathapuram நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சந்தையினை மேம்படுத்தும் பணிகள் செய்தல் | ரூ.8,79,00,717/- | ரூ.12,11,99,785/- | ரூ.13,15,48,749/- |
| | | | 37.88% மதிப்பீட்டை விட அதிகம் | 49.66% மதிப்பீட்டை விட அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.Sri Naachimaar Engineering Constructions, Namakkal நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.12,11,99,785/- ஆனது மதிப்பீட்டை விட 37.88% கூடுதலான விலைவிகிதம் கொடுத்துள்ளமையால், மேற்படி நிறுவனத்திடம் விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு 31.08.2020ல் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு

மேற்படி நிறுவனம் தனது 02.09.2020-ம் தேதிய கடிதத்தில் 37.88%-ல் இருந்து குறைத்து 35.13% கூடுதலான விலை விகிதத்தில் பணி செய்ய சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விலைவிகிதமும் ஏற்புடையதல்ல எனக் கருதி மீண்டும் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு ஒப்பந்தக்காரரை 02.09.2020ல் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு ஒப்பந்தக்காரர் தனது 04.09.2020ம் தேதிய கடிதத்தில் 35.13% கூடுதலான விலை விகிதத்தில் இருந்து 29.71% கூடுதலான விலை விகிதத்தில் பணியினை செய்வதற்கு சம்மதம் தெரிவித்தும் மேற்படி பணிக்கான தயார் செய்யப்பட்ட மதிப்பீடு 2018-19ம் ஆண்டுக்கான விலை விகிதத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளதாலும் தற்போது கட்டுமானப் பொருட்கள், எரிபொருள் மற்றும் போக்குவரத்து செலவினம் அதிகமாகி விட்டபடியாலும், மேற்படி நிறுவனம் 2வது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு முன் வந்து மதிப்பீட்டை விட 35.13% கூடுதலான விலைவிகிதத்தில் இருந்து குறைத்து மதிப்பீட்டை விட 29.71% கூடுதலான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்து தர ஒப்புக்கொண்டு இறுதியாக கடிதம் கொடுத்துள்ளது.

மேற்படி இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு பின்வரும் M/s.Sri Naachimaar Engineering Constructions, Namakkal நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.11,40,15,891/- என்பது 2018-19-ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 29.71% கூடுதலாக இருப்பதால், மேற்படி திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்வது தொடர்பாக 2020-21 ம் வருடத்திய விலை விபர பட்டியல் (Data 2020-21)-ஐ சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தில் ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கை தொடர 04.09.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் முடிவு செய்து மாமன்றத் தீர்மானம் எண்.114 நாள் 04.09.2020-ல் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதன்படி முதன்மை தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை, அவர்களின் கடிதம் எண்.28430/2019/DO2 நாள் 25.09.2020ல் 2020-21ம் ஆண்டிற்கான Data-விற்கு ஒப்புதல் வழங்கப்பட்டதின்படி, 2020-21ம் ஆண்டிற்கான விலை விகிதத்துடன் ஒப்பந்தக்காரர் இரண்டாவது விலைக்குறைப்பிற்கு பின் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன் ஒப்பிடப்பட்டதில், அன்னாரது ஒப்பந்தப்புள்ளி மதிப்பானது, மதிப்பீட்டை விட 9.90% கூடுதலாக உள்ளதால், 15.10.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரக்குழு, சென்னை கூட்ட நடவடிக்கையின்படி, மேற்படி திட்டப்பணி சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருப்பதாலும், ஒப்பந்தக்காரரின் 2வது விலைக்குறைப்பிற்கு பின்வரும் ஒப்பந்த மதிப்பு (ரூ.11,40,15,891/-) என்பது 2018-19ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட29.71% கூடுதலாகவும் மற்றும் தற்போதைய 2020-21ம் வருடத்திய விலைவிகிதத்தின்படி மதிப்பீட்டை விட 9.90% அதிகமாக உள்ளதினை ஒப்புக்கொள்ளலாம் என கூட்ட நடவடிக்கைகளில் தெரிவித்துள்ளதின்படி, இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 16.10.2020 ம் தேதியில் பரிந்துரை செய்யப்பட்டு, மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்வதற்கு மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சந்தையினை மேம்படுத்தும் பணியினை மேற்கொள்வதற்கு இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு பின்வரும் M/s.Sri Naachimaar Engineering Constructions, Namakkal நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.11,40,15,891/- என்பது 2018-19-ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட 29.71% கூடுதலாக இருப்பதால், மேற்படி திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்வது தொடர்பாக 2020-21 ம் வருடத்திய விலை விபர பட்டியல் (Data 2020-21) -ஐ சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகத்தில் ஒப்புதல் பெற்று மேல்நடவடிக்கை தொடர 04.09.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் முடிவு செய்து மாமன்றத் தீர்மானம் எண்.114 நாள் 04.09.2020 ல் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதன்படி முதன்மை தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை, அவர்களின் கடிதம் எண்.28430/2019/DO2 நாள் 25.09.2020ல் 2020-21ம் ஆண்டிற்கான Data -விற்கு ஒப்புதல் வழங்கப்பட்டதின்படி, 2020-21ம் ஆண்டிற்கான விலை விகிதத்துடன் ஒப்பந்தக்காரர் இரண்டாவது விலைக்குறைப்பிற்கு பின் கொடுத்துள்ள ஒப்பந்த மதிப்புடன்

ஒப்பிடப்பட்டதில், அன்னாரது ஒப்பந்தப்புள்ளி மதிப்பானது, மதிப்பீட்டை விட 9.90% கூடுதலாக உள்ளதால், 15.10.2020ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரக்குழு, சென்னை கூட்ட நடவடிக்கையின்படி, மேற்படி திட்டப்பணி சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருப்பதாலும், ஒப்பந்தக்காரரின் 2வது விலைக்குறைப்பிற்கு பின் வரும் ஒப்பந்த மதிப்பு (ரூ.11,40,15,891/-) என்பது 2018-19ம் வருடத்திய துறை விலை விகிதத்தின்படி மதிப்பீட்டை விட29.71% கூடுதலாகவும் மற்றும் தற்போதைய 2020-21ம் வருடத்திய விலைவிகிதத்தின்படி மதிப்பீட்டை விட 9.90% அதிகமாக உள்ளதினை ஒப்புக்கொள்ளலாம் என கூட்ட நடவடிக்கைகளில் தெரிவித்துள்ளதின்படி, இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 16.10.2020 ம் தேதியில் பரிந்துரை செய்யப்பட்டு, மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ஆ) மேலும், மேற்படி பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.1097.00 இலட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 149:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ஒ.பு.அ.எண். 2/2020-21/SCM)

---

4) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம் வார்டு எண் 22ல் மனகாவலம்பிள்ளை மருத்துவமனை சாலையில் நகர சர்வே எண் 1341, 1342/1, 1077/2-ல் அமைந்துள்ள பழைய மருத்துவர் குடியிருப்பு, பழுதடைந்த ஓட்டுநர் குடியிருப்பு மற்றும் அங்கன்வாடி கட்டிடங்களை அப்புறப்படுத்திவிட்டு சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் ரூ.9.91 கோடி மதிப்பீட்டில் புதியதாக மினி பல்நோக்கு கூட்டஅரங்கம் அமைக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளது. எனவே மேற்படி மனகாவலம்பிள்ளை மருத்துவமனை சாலையில் மருத்துவர் குடியிருப்பு, பழுதடைந்த ஓட்டுநர் குடியிருப்பு மற்றும் அங்கன்வாடி கட்டிடங்கள் ஆகியவைகளை இடித்து அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேற்படி கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு ஆகும் செலவினத் தொகைக்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பகுதியில் உள்ள கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்திட மாமன்ற அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு

பொருளில் கண்ட விபரப்படி திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலம் வார்டு எண் 22ல் மனகாவலம்பிள்ளை மருத்துவமனை சாலையில் நகர சர்வே எண் 1341, 1342/1, 1077/2-ல் அமைந்துள்ள பழைய மருத்துவர் குடியிருப்பு, பழுதடைந்த ஓட்டுநர் குடியிருப்பு மற்றும் அங்கன்வாடி கட்டிடங்களை அப்புறப்படுத்திவிட்டு சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் ரூ.9.91 கோடி மதிப்பீட்டில் புதியதாக மினி பல்நோக்கு கூட்ட அரங்கம் அமைக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளது. எனவே மேற்படி மனகாவலம்பிள்ளை மருத்துவமனை சாலையில் மருத்துவர் குடியிருப்பு, பழுதடைந்த ஓட்டுநர் குடியிருப்பு மற்றும் அங்கன்வாடி கட்டிடங்கள் ஆகியவைகளை இடித்து அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேற்படி கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு ஆகும் செலவினத் தொகைக்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பகுதியில் உள்ள கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்திட தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 150:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ1/2950/2020-21-பாளை)

---

5) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட பாளை பேருந்து நிலையம் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் புதியதாக கட்டப்படுதனைத் தொடர்ந்து

அங்குள்ள வணிக வளாக கடைகள் 01.08.2020 முதல் காலி செய்யப்பட்டு கடைகள் அனைத்தும் இடிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றது.

எனவே பாளை பேருந்து நிலைய வளாகத்தில் செயல்பட்டு வந்த வணிக வளாக கடைகளுக்கான வரியில்லா இன கேட்பில் (Non Tax) 01.08.2020 முதல் 31.03.2021 முடியவுள்ள காலங்களுக்கான கேட்புத் தொகை ரூ.739978/-ஐ (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) நீக்கம் செய்து அவற்றிற்கான வரிவிதிப்புககளை இரத்து செய்திடவும் மாமன்ற அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி பாளை பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள வணிக கடைகள் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் 01.08.2020 முதல் காலி செய்யப்பட்டு கடைகள் அனைத்தும் இடிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதால், மேற்படி பாளை பேருந்து நிலைய வணிகவளாக கடைகளுக்கான இத்துடன் இணைக்கப்பட்ட பட்டியலில் கண்ட 01.08.2020 முதல் 31.03.2021 முடியவுள்ள காலங்களுக்கான கேட்புத் தொகை ரூ.739978/-ஐ கணினியிலிருந்து நீக்கம் செய்ய மாமன்றம் முடிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 151:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் அ1/6557/2020-பாளை)

---

6) திருநெல்வேலி மாநகராட்சியில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்ட கூடுதல் காப்புறுதித் தொகையினை (FSD) திரும்ப வழங்கக் கேட்டு M/s P&C Constructions Pvt. Ltd நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 13.01.2020-ம் தேதிய விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No. | Name of work | FSD | Register Details |
|---|---|---|---|
| 1 | New Water Supply Improvement Scheme @ W.No.19, 26, 27 | Rs.15,20,165/- | Main Office Lapsed Register 2014-15 P.No.10 |

அலுவலகக் குறிப்பு:

பொருளில் குறிப்பிட்டுள்ள கூடுதல் காப்புறுதித் தொகை (FSD) மைய அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டின்படி இருப்பில் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி எண் 7(10)(i)(ii)-ன்படி மேற்படி தொகை ரூ.15,20,165/- (ரூபாய் பதினைந்த இலட்சத்து இருபதாயிரத்து நூற்று அறுபத்தி ஐந்து மட்டும்) M/s P&C Constructions Pvt. Ltd நிறுவனத்திற்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 152:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ1/3909/2005)

---

7) திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 29, பாத்திமா நகர், ஹபீப்நகர் பகுதிகளில் ஏற்கனவே அமைந்துள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 36 எண்ணம் 20 W LED தெருவிளக்கு பொருத்திடவும் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய செலவுத் தொகை சேர்த்து மொத்தம் உத்தேச செலவினத் தொகை ரூ.3,60,000/- (ரூபாய் மூன்று லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) செலவாகும். மாமன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட பொருளில் குறிப்பிட்டுள்ள இடங்களில் ஏற்கனவே அமைந்துள்ள மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 36 எண்ணம் 20 W LED

தெருவிளக்குகள் பொருத்த ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.3,60,000/- (ரூபாய் மூன்று லட்சத்து அறுபதாயிரம் மட்டும்)-க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 153:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் இ1/3002/2020-மே.பா.)

---

8) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 43, பாபா தெருவிலுள்ளசமுதாயக்கூடம் மிகவும் பழுதடைந்து RCC கூரை இடிந்து விழும் நிலையில் அபாயகரமாக இருந்ததால், பொது மக்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு ஆர்.சி.சி. கூரையினை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது அப்பகுதி மக்கள் விசேஷங்கள், கல்யாணம் மற்றும் இதர நிகழ்ச்சிகளை நடத்த முடியாமல் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். இங்கு வசிக்கும் மக்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியவர்கள். மேற்படி பொது மக்களின் கோரிக்கையின்படி பழுதடைந்த சமுதாய கூடத்தை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதியதாக சமுதாய கூடம் கட்டித் தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள். எனவே மேற்படி சமுதாயக்கூடத்தினை இடித்து அப்புறப்படுத்துவதற்கும், அதற்குரிய செலவுத் தொகை ரூ.32,000/-க்கு நிர்வாக அனுமதியும் வழங்க மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்

அலுவலகக் குறிப்பு:

மேலே பொருளில் காணும் விபரப்படி திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 43, பாபா தெருவிலுள்ள மிகவும் பழுதடைந்த சமுதாயக்கூடத்தினை இடித்து அப்புறப்படுத்துவதற்கும், அதற்குரிய செலவுத் தொகை ரூபாய் 32000/-க்கு நிர்வாக அனுமதியும் வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 154:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ம.எண் 128/2019-2020-திலி)

---